மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரத்தின் அருகில் தர்மபுரி மாவட்ட அரசினர் தலைமை மருத்துவமனை ஒன்று செயல்பட்டு வருகிறது. அந்தப் பகுதித் தேவைகளை அதுவே நிறைவேற்றி முடிக்கிற வகையில் இருக்கிறது. மேலும் புதியதாக ஆரம்பிக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒன்று என்ற வகையில் அமைக்கப் பட்டு வருகிறது. அதை 20 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒன்று என்று அதிகரிக்கின்றபோது மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்களை இந்த அரசு பரிசீலனையில் எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ந. நஞ்சப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒரு தாலுக்கா மையம் என்பதை நான் இங்கே தெளிவுப்படுத்த விரும்புகிறேன். ஆரம்ப சுகாதார நிலையத்தை நான் கேட்கவில்லை. ஆரம்ப சுகாதார நிலையம் அங்கே இருக்கிறது. அந்த மாவட்டத்திலே அதிகமான நோய் தாக்குதலுக்கு ஆட்பட்டு சொல்லப்போனால் மலேரியா, காச நோய், தொழு நோய், இத்தகைய நோய்கள் எல்லாம் அதிகமாகத் தாக்குகின்ற பகுதி என்று அரசு புள்ளிவிவரங்களை கூறுகின்றன. அங்கு அரசு மருத்துவமனை அமைக்க அரசு நிலம் கேட்கிறது என்று 6. ஏக்கர் நிலத்தை வேறு பொதுமக்கள் சார்பாக வாங்கி வைத்து இருக்கிறோம். ஆகவே மக்கள் நலனை கருத்தில் கொண்டு பரிவுடன் மறு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி முடிவு எடுக்கின்ற பொது மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அரசு பரிசிலனை செய்யும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

இராதாபுரம் தொகுதிக்குக் குடிநீர் வழங்கல்.

* 3713. **திருமதி ரமணி நல்லதம்பி :**

மாண்புமிகு மக்கள்நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராதாபுரம் தொகுதியில் குடிநீர் பிரச்சினையை நிரந்தரமாக நீக்கும்நோக்கத்துடன் சேரன்மாதேவியில் இருந்து குழாய் மூலம் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குடிநீர் திட்டத்திற்கு நீராதாரம் தேர்ந்தெடுக்கும் பணிகள் தற்சமயம் துவங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.

1990 ஏப்ரல் 23]

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான ராதாபுரம் தொகுதி முழுவதிலும் குடிநீர் பற்றாக்குறை காரணமாக விலைக் கொடுத்து வாங்குகின்ற அவலம் இருக்கிறது. ஒவ்வொரு பிரச்சினைக்கும் ''இமிடியட் ரிலீப்', இண்டர்ரீம் ரிலீப், பரமனன்ட் ரிலீப்'' என்று 3 வகையான நிவாரணம் அளிக்க முடியும். அப்படி அந்தத் திட்டம் ஆய்வில் இருக்கின்ற காரணத்தால் அதைத் துரிதப்படுத்தி அதைச் செய்கின்ற வரையில் இடைக்கால நிவாரணமாக, உடனடி நிவாரணமாக, இலவசமாக குடிநீர் வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதியில் இருக்கின்ற 259 கிராமங்களுக்கும் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமாக தாமிரபரணி ஆற்றின் நீரை ஆதாரமாகக் கொண்டு வழங்குவதற்கான திட்டத்தை இப்போது ஆய்வு செய்து அந்தப் பகுதியில் குடிநீர் பிரச்சினையைத் நிரந்தரமாக தீர்த்து வைப்பதற்கு அரசு திட்டங்கள் தீட்டி வருகிறது. தற்காலிகமாக அவர்கள் உதவி கோரியிருக்கிறார்கள். அரசு வறட்சி சார்பில் எடுக்கின்ற முடிவுகளை ஒட்டி அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

9-50 மணி

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய திட்டத்திற்கு நன்றி. அந்தப் பணிக்காக ஒரு அலுவலகம் திறக்கப்பட்டு சர்வே பண்ணவும், எஸ்டிமேட் பண்ணவும் அலுவலர்கள் இருக்கிறார்கள். ஆனால் அதன் அறிக்கை டிசம்பர் 90-லேதான் கிடைக்கும் என்று கூறுகிறார்கள். அதை விரைவுபடுத்துகின்ற முறையிலே, அந்த அறிக்கை விரைவில் கிடைக்க கூடுதலான அலுவலர்களை நியமனம் செய்து, அந்த நடவடிக்கை துரிதப்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. மாதாமாதம் அந்த அதிகாரிகளுடன் கலந்து சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அறிவார்கள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நான் ஏற்கனவே இங்கே உரையாற்றுகின்றபோது என்னுடைய சாத்தான்குளம் தொகுதியிலே ஒரு குடம் தண்ணீர் ஒரு ரூபாய் விற்கிறது என்று சொன்னேன். ஆகவே, ராதாபுரம் தொகுதியைப் பார்க்கின்றபோது என்னுடைய தொகுதியையும் சேர்த்து பார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சாத்தான் குளத்தில் விழ மாட்டார் என்ற உறுதிமொழியை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உறுதி மொழியை மாண்புமிகு முதல்வர் அவர்களே கொடுத்திருக்கிற காரணத்தால், நிச்சயமாக அது எடுத்துக்கொள்ளப்படும் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

* 5318. திரு க. பழனிசுவாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நெடுங்குளத்திலிருந்து ராசிபுரம் வரை உலக வங்கி மூலமாக அமைக்கவிருக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நெடுங்குளத்திலிருந்து ராசிபுரம் வரை நிறைவேற்றப் படவிருக்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் உலக வங்கி மூலமாக அமைக்கப்படவில்லை. எனினும் ஆயுள் காப்பீட்டுக் கழக நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் தற்போது செயலாக்கத்தில் உள்ளது. திட்டம் 1992 ஆம் வருடம் முடி வடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுங்குளத்திலிருந்து ராசிபுரம் வரையில் செல்லும் என்று கூட்டுக் குடிநீர் திட்டம் அனுமதிக்கப்பட்டு 2 ஆண்டுகள் ஆகிறது. போன வருடம் 45 இலட்சம் ரூபாயும் நடப்பு ஆண்டில் 2 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 2½ கோடி ரூபாய்தான் செலவழிப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத் தினுடைய மதிப்பீடு மொத்தம் 20 கோடி ரூபாய். 3 ஆண்டு களாகியும் இதுவரை 2½ கோடி ரூபாய்தான் செலவழிக்கப்பட்ட தாகக் கூறியிருக்கிறார்கள். இன்னும் 17½ கோடி ரூபாய் செலவழிக்க பல ஆண்டுகளாகும் போலத் தெரிகிறது. ஆகவே நடப்பு ஆண்டில் நிதியை அதிகப்படுத்தி அந்தத் திட்டத்தை விரைவாக முடிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்பு கிறேன்.